
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா்களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**Lakśana and Lakśya in Music**
Srivaramangai Sadagopan

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
ச. காயத்ரி தேவி

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
Ms. Janaki Sadagopan

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# குறுநில மன்னர்களின் பொருளாதாரநிலை

நெறியாளர்
முனைவர் அ.கன்னிமுத்து
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை- 642 126

கட்டுரையாளர்
மு. சதீஸ்குமார்,
தமிழ்த்துறை,
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
அரசு கலைக்கல்லூரி,
உடுமலைப்பேட்டை- 642 126

## Abstract

*The economic status of a country depends on its resources. During the Sangam period, agriculture was the primary industry. The main duty of the kings was to improve it through technology and lead the country to the path of development. The king should take many steps to increase the country's income by improving agriculture and by bartering with other landowners. Only then will the income of a country increase and the economic status improve. The small-scale kings were distinguished by the resources available in the Kurinji land such as mineral resources and value-added products. Due to this, they were also economically advanced. The purpose of this article is to examine the economic status of such small-scale kings.*

***Key words: Seven hills, Konganam kizan, Income , Economic status , Bali nagar, Parambu nadu***

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டின் வளத்தினை பொருத்தே அதனுடைய பொருளாதார நிலை அமைகின்றது. சங்க காலத்தில் வேளாண்மையே முதன்மைத் தொழிலாக இருந்துள்ளது. தொழில்நுட்பங்கள் மூலம் அதனை மேம்படுத்தி நாட்டினை வளர்ச்சி பாதைக்கு இட்டுச் செல்வதே மன்னர்களின் முக்கிய கடமையாகும். வேளாண்மையினை மேம்படுத்தியும் பிற நிலத்து மக்களுடன் பண்டமாற்று வாணிபம் செய்வதன் மூலமாகவும் நாட்டின் வருவாயினை பெருக்க மன்னன் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்பொழுதே ஒரு நாட்டின் வருவாய் உயர்ந்து பொருளாதார நிலையில் மேம்பட்டு விளங்கும். குறுநில மன்னர்கள் குறிஞ்சி நிலத்தில் கிடைக்கக்கூடிய கனிம வளங்கள் மதிப்புக்கூட்டு பொருட்கள் போன்ற வள ஆதாரங்களை கொண்டு சிறப்புடன் விளங்கினர். இதனால் பொருளாதாரத்திலும் மேம்பட்டு விளங்கி இருந்தனர். அத்தகைய குறுநில மன்னர்களின் பொருளாதார நிலையினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச்சொற்கள் :** ஏழில் குன்றம், கொங்கானங்கிழான் , வருவாய், பொருளாதார நிலை , பாழி நகரம், பறம்பு நாடு

## முன்னுரை

சங்க காலச் சமூகப் படிநிலையில் மூவேந்தர்களுக்கு அடுத்த நிலையில் பெரிதும் சிறப்பினைப் பெற்றவர்கன் குறுநில மன்னர்களே ஆவர். குறுநில மன்னர்கள் தங்கள் ஆட்சியை வளமிக்க ஊர்களிலும் மலைநாடுகளிலும் நடந்தி வந்திருக்கின்றனர். தன் நாட்டின் இயற்கை

வளங்கள் மற்றும் வேளாண்மையின் மூலமாக வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு, அதனை பிறருக்கு கொடுப்பதன் வாயிலாக பெரும் புகழினையும் அடைந்தனர். குறுநில மன்னர்களின் ஆட்சி சிறப்புற்று நடைபெற வணிக பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கியதே காரணமாக இருந்திருக்கக் கூடும். தன் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொண்டு, அதன் மூலமாக சிறப்புப்பெற்று விளங்கிய தன்மையையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## பொருளாதாரம்

நாடானாது வளம் பெற்று தன்னிறைவுடன் இருக்க வேண்டுமானால் அந்நாட்டின் பொருளாதாரம் மிகவும் செழிப்பாக இருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். நாட்டைப் பொருளாதார வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதே அந்நாட்டு மன்னனின் முக்கிய கடமையாகும். ஏனெனில்

**''உற்பத்தி உறவுகளினடியாக உருவாகும் பொருளாதார அமைப்பே ஒரு சமூகத்தின் அத்திவாரமாய் உள்ளது. அதாவது பொருளாதார அமைப்பே அடித்தளம்''.1** அதோடு

**பொருளாதார அடித்தளமே , சமூகத்தின் கருத்து வகைகளை அதாவது, சமூகத்தினுடைய சித்தாந்த மேற்கட்டுக்கோப்பை (அரசியல், சட்ட, சமய, தத்துவார்த்த, கலை இலக்கியக் கருத்துக்களை ) நிர்ணயிக்கிறது.2** என்று கருத்துக்களின் வாயிலாக நாட்டின் ஒட்டுமொத்த கூறுகளையும் பொருளாதாரமே நிர்ணயிக்கும் தன்மை பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

சங்க காலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு முக்கிய தொழிலாக வேளாண்மையே இருந்துள்ளது. வேளாண்மையின் மூலமாக வருவாயினை பெருக்கி நாட்டின் வளத்தினை மேம்படுத்த முடியும். ஏனெனில் வேளாண்மையில் விளைந்த பொருட்கள் அந்நாட்டின் பொருளாதார நிலையைத் தீர்மானிக்கும் முக்கியக் கூறாக அமைகின்றது.

## குறுநில மன்னர்களின் மலைவளம்

குறுநில மன்னர்கள் ஆட்சி செய்த மலைநாடுகள் பெரும்வளத்தினை உடையதாகவும் மதிப்புக் கூட்டுப் பொருட்கள் விளைகின்ற பகுதியாகவும் இருந்துள்ளது. பாரியின் பறம்பு மலையானது உழவர்களால் உழாமலேயே உண்ணுகின்ற உணவுப் பொருள்கள் இயற்கையாகவே விளையக்கூடிய தன்மையை பெற்றிருந்தன. கபிலர் பாரியின் பறம்பு மலையின் செல்வச் செழிப்பினை

**"அளிதோ தானே பாரியது பறம்பே**
**நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்**
**உழவ ருழாதன நான்குபய னுடைத்தே**
**ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே**
**இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே**
**மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே**
**நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து**
**திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே"3**

எனும் வரிகள் மூலம் பாரியின் பறம்பு மலைச் சிறப்பினைக் காணமுடிகின்றது. மன்னர்கள் முற்றுகை இட்டாலும் இயற்கை தரக்கூடிய உணவுப் பொருட்களே மக்களைக் காப்பாற்றும் என்பதை இதன்மூலம் அறிய முடிகின்றது. மூவேந்தர்களின் முற்றுகையால் மக்களுக்கு உணவுப்பற்றாக்குறை ஏற்பட்ட சூழலில் வெளியிலிருந்து கொண்டு வரமுடியாத சூழலின்போது பறம்பு தரும் இயற்கை உணவே மக்கள் பசியைப் போக்கிக்கொள்ள உதவியது. மூங்கில் நெல், சுளைகளை உடைய பலா, வளமான கொடிகளை உடைய வள்ளிக்கிழங்கு, தேனடைகளும் இருந்ததை அறியமுடிகிறது.

### நன்னனின் மலைவளம்

நன்னனின் கொண்கான மலையில் அகில், சந்தனம், தேக்கு, மிளகு, பொன், யானைத்தந்தங்கள் போன்ற மதிப்புக்கூட்டுப்பொருள்கள் கிடைக்கப்பெற்றன.

**“பொன்படு கொண்கான நன்னன் நல்நாட்டு**

**ஏழிற் குன்றம்…….”4**

எனும் வரிகள் பெரும் வருவாய்களைப் பெற்றிருந்த தன்மையை புலப்படுத்துகின்றது. கொண்கானத்தின் வளங்கள் மூலமாக நன்னன் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கி வணிகத்தில் சிறந்து விளங்கினான்.

**“பொன்னையும் மணிக்கற்களையும் வாணிகப் பண்டமாக்கி வளம் பெற்றிருக்கும் வாய்ப்பினைப் பெற்றான் நன்னன். அதனால் செல்வத்தில் திளைத்தான். அவன் செல்வத்தினை பாழி நகரத்தில் உள்ள குளத்தில் மறைந்து வைத்தான் அந்தச் செல்வம் உரோமானியக் காசுகளாகவும் இருக்கலாம். அவன் நகரங்கள் செல்வம் மிக்க நகரங்களாக இருந்தமையால் சேரன் அவன் மீது படையெடுத்தான்”5**

இச்செய்தியின் மூலம் உரோமானியர்கள் பாலக்காட்டு கணவாய் வழியாக வணிகம் செய்த செய்தியினை அறியமுடிகிறது. வேந்தர்கள் படையெடுத்துச் செல்கின்ற அளவிற்கு நன்னன் செல்வ வளத்தினைக் கொண்டு பொருளாதாரத்தில் மேம்பட்டுத் திகழ்ந்தான்.

### பறம்பு நாட்டில் முல்லைநில வேளாண்மை

மழை வளமென்பது நாட்டின் முக்கிய ஆதாரமாகும். அத்தகு மழை பெய்யினும் பெய்யாவிடினும் வளம் குன்றாத நாடாக பறம்பு இருந்துள்ளது. வன்புல நாட்டின் வேளாண்மையிலும் பாரியின் பறம்பு நாடு மிகுந்த வளமுடையதாகவே இருந்துள்ள தன்மையை

**“பெய்யினும் பெய்யா தாயினும் மருவி**

**கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக”6**

**“கைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்**

**தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்**

**வயலக நிறையப் புதற்பூ மலர**

**மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்”7**

எனும் வரிகள் புலப்படுத்துகிறது. கரிய மீனாகிய சனி மீனானது தனது இயல்பான ஒளியுடன் தோன்றாமல் சற்று மாறுபட்டு புகைப்படலத்துடன் தோன்றினாலும், வெள்ளி மீனானது தென்திசைச் சென்றாலும் கூட வயலின் வளம் சிறிதும் குறையாமல் பறம்பு நாடு சிறந்து

விளங்கியது. இவ்வாறு கோள் மாற்றத்தினால் சரியான பருவத்தில் மழையும் பெய்யாது காற்றின் திசையும் பிறழ்ந்து காலநிலை மாறுபட்ட காலத்தும் கூட பாரிநாடு செழித்து இருந்ததை உணர முடிகின்றது.

பாரி நாட்டு உழவர்கள் நிலத்தை புழுதிகலங்க பலமுறை உழுவதால் ஏற்படும் நன்மையை நன்கு அறிந்திருந்தனர்.

**''பூழி மயங்கப் பலவுழுது வித்திப்**

**பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்''*8***

உழவுத்தொழிலில் ''**பல்லியாடுதல்''** என்னும் கருவியைப் பயன்படுத்தி உள்ளனர். பல்லியாடும் கருவியைப் பற்றி உ.வே.சா கூறும் பொழுது ''**பல்லியாடுதல், தாளடித்தல், ஊடடித்தல் என்பன ஒரு பொருட் சொற்கள்; அது நெருங்கி முளைத்த பயிர்களை விலக்குதற்கும் வருத்தமின்றிக் களை பிடுங்குதற்குமாகக் கீழ் நோக்கியுள்ள கூரிய பல முனைகளையுடைய பலகையின் இரண்டு பக்கத்தும் மேற்புறத்திலுள்ள வளையங்களிற் கட்டிய கயிறுகளைச் சேர்த்துப்** பூட்டிய **நுகத்தை வாய் கட்டப்பட்டுள்ள எருதுகளின் பிடரியில் வைத்துப் பூட்டி உழச்செய்தல்''9**

என்று உ.வே.சா தம் உரையில் உழவுக்கருவியின் தன்மைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நிலத்தைப் பல முறை உழுவதால் பயிர்கள் நன்றாக விளையும் என்ற கருத்தை

**''தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்**

**வேண்டாது சாலப் படும்''*10***

எனும் குறள் வழி அறியமுடிகிறது. இவ்வாறாக உழவு செய்கின்ற நிலங்களை பண்படுத்தி நன்றாக விளைச்சல்களை கண்டு உழவர்கள் மகிழ்கின்றனர்.

மேட்டுநிலங்களில் விளைந்த வரகு போன்ற பயிர்களை பாறையின் மீது கிடத்தி கவட்டைக் குளம்புகளை உடைய மாடுகளைப் பிணையல் கட்டி ஓட்டி உதிரச்செய்வர். அவற்றைத் தூற்றி தன் அண்ணனும் தந்தையும் தோளில் சுமந்துகொண்டு வந்து மகளிர் திருவையில் அரைத்து, முறையாக உரலில் இட்டு உலக்கையால் குற்றி அரிசியாக்குவர்.

**''கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி,**

**கவட்டுஅடிப்பொருத பல்சினை உதிர்வை**

**அகன்கண் பாறைச் செவ்வயின் தெறீஇ,**

**வரிஅணி பணைத்தோள் வார்செவித் தன்னையர்**

**பண்ணைவெண் பழத்து அரிசி ஏய்ப்பச்''*11***

இவ்வரிகள் மக்களின் வேளாண்மை சிறப்பினை எடுத்துரைக்கின்றது. குறுநில மன்னர்கள் பெரும்பாலும் மலையும் மலை சார்ந்த நிலப்பகுதிகளையும் சிறுபான்மை முல்லை நிலப்பகுதிகளையும் ஆட்சி செய்து சிறப்புற்று விளங்கினர். வறட்சி காலத்தும் வளம் தரும் இயல்புடைய மலையை பொருளாதாரத்திற்கான அடிப்படை ஆதாரங்களாகக் கொண்டு விளங்கினர்.

### வணிகம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய ஆதராங்களாக உழவுத்தொழிலும் வணிகமுமே இருந்துள்ளது. வணிகம் மூலமாகவே உள்நாட்டுப்பொருள்கள் வெளிநாடுகளுக்கும் மற்ற நிலங்களுக்கும் வெளிநாட்டுப்பொருள்கள் உள்நாடுகளுக்கும் தரைவழியாகவும் கடல்

வழியாகவும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டன. ஒரு நிலத்தில் விளைந்த பொருள்கள் பண்டமாற்றின் வாயிலாக மற்ற நிலங்களுக்கு விற்கப்பட்டன. மருத நிலத்து நெல்லைக் கொடுத்து உமணர்களிடமிருந்து உப்பைப்பெற்றனர். குறிஞ்சி நில மக்கள் தேனும் கிழங்குகள், யானைத்தந்தங்கள் போன்றவற்றைக் கொடுத்து மீனும் உப்பும் பெற்றுக்கொண்டனர்.

பாரி மகளிர் தன்னுடைய தந்தை இருந்த காலத்தில் அவரை எதிர்த்து போரிட வந்த வேந்தரின் குதிரைகளை எண்ணுவர். பாரி இறந்தபின் இப்பொழுதோ குப்பைமேட்டின் மீதேறி உமணர்கள் உப்பு ஏற்றிச்செல்லும் வண்டியை எண்ணிக்கொண்டுள்ளனர் என்பதை

***"பீரை நாறிய சுரைஇவர் மருங்கின்***

***ஈத்திலைக் குப்பை யேறி யுமணர்***

***உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ"12***

எனும் பாடல் வரிகள் கபிலரின் வருத்தத்தை உணர்த்துகின்றது. உமணர்கள் செல்கின்ற வழி வணிகப்பெருவழிகளில் ஒன்றாக இருந்திருக்கின்றது.

புல்லியினுடைய வேங்கடமலையில் பரற்கள் பொருந்திய காட்டில் கடலில் விளைந்த உப்பினை உமணர்கள் எருதுகள் வாயிலாக இழுக்க முடியாமல் இழுத்துக்கொண்டு வந்தனர். அப்பொழுது அங்கு நீர் ஊற்றினை வெட்டி அதன் மூலமாக நீர் வேட்கையை தணித்தனர்.

***"கடல்நீர் உப்பின் கணம்சால் உமணர்***

***உயங்குபகடு உயிர்ப்ப அசைஇ முரம்புஇடித்து***

***அகல்இடம் குழித்த அகல்வாய்க் கூவல்***

***ஆறுசெல் வம்பலர் அசைவிடஊறும்***

***புடையல்அம் கழற்கால் புல்லி குன்றத்து"13***

எனும்பாடலின் வாயிலாக வணிகப் பெருவழிகளில் பண்டமாற்றிற்காக வணிகப்பொருள் கொண்டு செல்லப்பட்டது. அவ்வழிகளில் செல்வோர் நீர் வேட்கையைத் தீர்த்துக் கொள்ள உமணர்கள் கிணறு வெட்டிய செய்தியினையும் அறியமுடிகிறது. மலைகளில் விளைந்த மிளகுகளை கழுதை மீது ஏற்றிச்சென்று விற்பனை செய்துள்ளனர். பண்டங்கள் விற்கச் செல்கின்ற இத்தகைய வழிகளை "**உல்குடைப்பெருவழி**" என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

தமிழகத்தில் நெய்யப்பட்ட ஆடை, சங்கு, முத்து, சந்தனம், மிளகு, தேக்கு, தந்தம் போன்றவை கடல் கடந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. பொன் மற்றும் குதிரைகள் போன்றவைகள் இறக்குமதி ஆயின.

***"சினங்கெழு தானை தித்தன் வெளியன்***

***இரங்குநீர்ப் பரப்பில் கானல்அம் பெருந்துறை***

***தனம்தரு நன்கலம்....." 14***

எனும் அகப்பாடல் வரிகள் கடல் வழியாக நடைபெற்ற வணிகத்தை செய்தியை தெரிவிக்கின்றன. தித்தனுக்கு உரிமையான கானலம் பெருந்துறை துறைமுகத்தில் கலம் வாயிலாக பொன் போன்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வணிகப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கிய தன்மையைக் காட்டுகிறது.

## முடிவுரை

- சங்க கால பொருளாதாரத்தின் அடிப்படையே வேளாண்மையாகும். பாரியின் பறம்பு மலையானது மிகுந்த வளமிக்க ஆதாரங்களைக்கொண்டு உழாமலே விளையக்கூடிய உணவுப்பொருள்களைக் கொண்டிருக்கின்றது.
- நன்னன் நாட்டு வளத்திலும் வணிக வளத்தின் மூலமாகவும் பெரும் செல்வங்களைத் திரட்டி கொண்கானத்தினை ஆட்சி செய்து வந்துள்ளதைக் காணமுடிகின்றது.வணிகத்திற்காகப் பெருவழிகளைப் பயன்படுத்தியதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.
- குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் நிலங்களுக்கிடையே பண்டமாற்றுமுறை சிறப்புடன் நடைபெற்றுள்ளன.
- தித்தன் கடல் வணிகத்தில் வெளிநாட்டுடன் தொடர்பு கொண்டு சிறந்து விளங்கியுள்ளான்.
- குறுநில மன்னர்கள் வேளாண்மை மற்றும் வணிகத்தில் சிறந்து விளங்கி பொருளாதாரத்தில் மேம்பட்டு இருந்துள்ளதை காணமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. கேசவன்.கோ., மண்ணும் மனித உறவுகளும், ப.xv
2. மேலது., ப.xvi
3. புறம்.109
4. நற்.391
5. பூங்குன்றன்.ர., வேளிர் வரலாறு, ப.78
6. புறம்.105
7. புறம்.117
8. புறம்.120
9. சாமிநாதையர் உ.வே., (ப.ஆ), புறநானூறு மூலமும் உரையும், ப.280
10. குறள்.1037
11. அகம்.393
12. புறம்.116
13. அகம்.295
14. அகம்.152

## துணைநூற்பட்டியல்

1. கேசவன்.கோ. மண்ணும் மனித உறவுகளும்,

சென்னை புக் ஹவுஸ்,

சென்னை. முதற்பதிப்பு — 1979.

2. சாமிநாதையர் உ.வே. (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும்,
உ.வேசா. நூல்நிலையம்,
சென்னை. பத்தாம் பதிப்பு- 2022

3. பாலசுப்ரமணியன் கு.வெ. - நற்றிணை மூலமும் உரையும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை. மூன்றாம் பதிப்பு — 2007

4. வேங்கடராமன்.எச் - (உ.ஆ), நற்றிணை மூலமும் உரையும்,
உ.வேசா. நூல்நிலையம்,
சென்னை. நான்காம் பதிப்பு- 2017

5. பூங்குன்றன். ர - வேளிர் வரலாறு,
தடாகம், சென்னை. முதற்பதிப்பு — 2021

6. சுப்ரமணியன் ச.வே. - சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி -3,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை. முதற்பதிப்பு- 2010

7. பரிமேலழகர் - திருக்குறள் (உ.ஆ),
சாரதா பதிப்பகம்,
சென்னை. முதற்பதிப்பு — 2002

*References :*

1. *Kesavan .k. - mannum manitha uravukalum , Chennai book house, Chennai. First edition* — 1979
2. *Swaminatha Iyar . U.Ve.* — *(Eds) , Purananuru Moolamum Uraiyum, U.Ve.Sa Noolnilaiyam , Chennai . Tenth Edition* -2022.
3. *Balasubramaniyan .K.V. - Natrinai Moolamum Uraiyum , New century book house, Chennai. Third Edition* -2007.
4. *Vengadaraman .H.* — *(Eds), Natrinai Moolamum Uraiyum, U.Ve.Sa.Noolnilaiyam, Chennai* — *Fourth Edition* -2017.
5. *Poongundran. R. - velir varalaru, Thadagam , Chennai. First Edition* — 2021.
6. *Subramaniyan .S.Ve.* — *Sanga ilakiyam ettuthokai Thokuthi* -3, *Manivasakar pathipakam, Chennai* — *First Edition* -2010.
7. *Parimezhalakar - Thirukural ( Eds ), Sarath pathipagam, Chennai* — *First Edition* — 2002.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com